வெளியீடு எண் 638.

உ


சிவமயம்

# புட்ப விதி

GF
R673x1:9
L2

தருமையாதீனம்

1972



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 638.

உ

குருபாதம்

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச பட்டாரகர்

அருளிச்செய்த

# புட்ப விதி

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

வெளியிடப்பெற்றது.

**நான்மங்கல விழா மலர்**

பரிதாபி - சித்திரை - ௰

தருமையாதீனம்

22—4—1972

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

# முன்னுரை

சிவபெருமானது திருவருளைப் பெற்று இம்மை மறுமை நலங்களை அடைதற்குரிய வழி அப்பெருமானைப் பூசிப்பது ஒன்றேயாகும். இனிப் பிற தெய்வங்களின் அருளைப் பெறுதற்கும் செய்யத்தக்கது பூசையே. அதற்கு இன்றியமையாதது பூ. "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" "கற்றுக் கொள்வன வாயுள ; நாவுள ; - இட்டுக் கொள்வன பூவுள ; நீருள" என்ற அருள்மொழிகளிலும், பூவே முதலில் சொல்லப்படுகின்றது. "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை", "போதும் பெறாவிடிற் பச்சிலை உண்டு", 'என்போலிகள் பறித்து இட்ட இலையும் முகையும் எல்லாம் — அம்போ தெனக் கொள்ளும் ஐயன் ஐயாறன் அடித்தலமே" என்றாற்போலும் திருவாக்குக்கள், பத்திரங்களும் பூக்களோடு ஒத்திருத்தலை விளக்கும். ஆகவே, பூசை செய்வோர்க்கு முதற்கண் வேண்டுவன பத்திர புட்பங்கள். ஆயினும், இவற்றை முறையறிந்து பெற்றுப் பூசித்தல் வேண்டும். அம்முறை 'புட்ப விதி' எனப்படுகின்றது.

புட்ப விதிகளை ஆகமங்கள் ஆங்காங்குச் சிறிது சிறிது கூறும். "பூத் தேர்ந்து ஆயன கொண்டு", "உரைசெய் நூல்வழி ஒண்மலர் எட்டிட" "பரந்து பல் ஆய்மலர் இட்டு" என்பன முதலாகத் தேவார திருவாசகங்களிலும் புட்ப விதி பற்றிய

குறிப்புக்கள் காணப்படுகின்றன, எறிபத்த நாயனார் புராணத்திலும், முருக நாயனார் புராணத்திலும் சேக்கிழார் புட்ப விதியைச் சிறிது விரித்துக் கூறியுள்ளார். எனினும், புட்ப விதிகளை முற்றும் முறையாகக் கூறுகின்ற தமிழ்நூல், திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் வந்து, திருவாரூரில் ஆசிரியத் தன்மையுடன் எழுந்தருளியிருந்த கமலை ஞானப்பிரகாச பட்டாரகர் அருளிச் செய்த 'புட்ப விதி' என்னும் நூலேயாகும். இவ்வாசிரியரே தருமையாதீனத்தின் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீகுருஞானசம்பந்தருக்கு ஞானாசாரியர் என்பதும், இவரது அருளாணையின் வண்ணமே ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமையை அடைந்து ஞான பீடம் நிறுவி, சைவ சமய பரிபாலனம் செய்தார் என்பதும் யாவரும் அறிந்தவை.

தருமையாதீனத்தில் இது பொழுது 26 ஆவது குருமகா சந்நிதானமாக அருளாட்சியேற்று வீற்றிருந்தருளும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இது பொழுது கிடைத்தற்கரிய பல சிறந்த நூல்கள், பலருக்கும் கிடைக்குமாறு வெளிவரல் வேண்டும் என்னும் அருள் நோக்கம் உடையவர்கள். இவர்கள் அருளாட்சியில் இவர்களது முதல் ஜென்மநட்சத்திர விழாமலராக இந்நூல் வெளிவருகின்றது.

தருமையாதீனத் தாபகருக்கு ஞானாசாரியராய் விளங்கியருளிய ஸ்ரீ ஞானப்பிரகாச பட்டாரகர் அருளிச்செய்த நூல், இவ்வாதீன 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் முதல் ஜென்ம நட்சத்திர விழா மலராக வெளிவருதல் மிகப் பொருத்தமே. மங்கல நாள்விழாவாகிய ஜென்மநட்சத்திர

விழாவில், மங்கலப் பொருளாகிய புட்பங்களின் விதிபற்றிய மலர் வெளிவருதல் திருவருளின் அமைப்பு என்றே எண்ணி மகிழத்தக்கதாக உள்ளது.

செய்யுள் வடிவில் உள்ள இந்நூலுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளப்பாங்கின்படி சிறியதோர் உரை இதுபொழுது அடியேனால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

காப்புச் செய்யுள், நூற்பயன் கூறும்செய்யுள் இவற்றால் இந்நூலின் பெயர் 'புட்ப விதி மாலை' என்பதே எனத் துணியப்படுகின்றது. 'திருமந்திர மாலை' என்பது 'திருமந்திரம்' என்றே ஆகிவிட்டது போல, 'புட்ப விதி மாலை' என்பதும் நாளடைவில் 'புட்ப விதி' என்றே ஆகிவிட்டமையால், முன்னைப் பதிப்பின்படி 'புட்ப விதி' என்ற பெயருடனே இது பதிப்பிக்கப் பெற்றது.

இதனை அன்பர்கள் பெற்று 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி பல்லாண்டு வாழ்க வாழ்க என மலர் தூவி வாழ்த்திப் பயன் பெறுவார்களாக.

அடியேன்,

தருமபுரம்,
22-4-1972.

சி. அருணைவடிவேல்,
ஆதீனப் புலவர், தருமையாதீனம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி
யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்
கன்பெனக்கும்
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை ஏத்த
முழுவதுமே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# புட்ப விதி

## விநாயகர் காப்பு

பாமாலை சூடும் பரமற்கு நாயடியேன்
பூமாலை பாடிப் புனைகின்றேன் — மாமாது
வேதத் தலைவரருள் வேழத்தின் பாதமலர்
போதத் தலைமேற் புனைந்து.

---

உரை :— உமையம்மைக்கு நாயகரும், வேதத்திற்கு முதல்வரும் ஆகிய சிவபெருமான் பெற்றருளிய யானைமுகக் கடவுளின் திருவடி மலர்களை நன்கு தலைமேல் சூட்டிக் கொண்டு, பாமாலையை விரும்பிச் சூடுகின்ற சிவபெருமானுக்கு, 'புட்பவிதி மாலை' என்னும் நூலைப் பாடிச் சாத்துகின்றேன்.

குறிப்பு :— மா மாது - மகாதேவி. போத - மிகவும். 'புட்பம்' என்பது பத்திரத்தையும் தழுவி நின்ற பெயர். பெரும்பான்மை பற்றி, 'புட்பவிதி' என்று பெயரிட்டிருப்பினும், பிற விதிகள் சிலவும் இதன்கண்சொல்லப்படும்.

# 2

## சிவபெருமான் துதி

*பொன்பூத்த நறவிதழி புரிசடைமேற் புனைந்து*
*புனல்அறுகு வெள்ளெருக்கம் பூச்சூடி நளின*
*மின்பூத்த கருங்குவளை பசுங்குமிழ்செங் காந்தள்*
*வெண்முல்லை அரக்காம்பல் இடப்பாகம் பூத்து*
*முன்பூத்த புண்டரிகம், வெண்தளவம் இரண்டு*
*முகமலர இமையவர்கள் அகமலர முகுந்தன்*
*தன்பூத்த திருவுந்தி அயன்பரவக் கனக*
*சபையில்நட மிடுகடவுள் சரணமலர் சரணம்.* 1

---

உரை :— பொன் பூத்ததுபோன்ற, தேன் பொருந்திய கொன்றை மாலையைப் புரியாகிய சடை முடியின்மேல் அணிந்து, அதனுடன் அறுகு, வெள்ளெருக்கம் பூ இவற்றைக் கங்கை நீருடன் புனைந்து, தாமரை, குவளை, குமிழ், காந்தள், முல்லை, செவ்வாம்பல் ஆகிய இப்பூக்கள் இடப் பாகத்தில் பூத்து நிற்க, மற்றும் முகத்திலே தாமரை, முல்லை இரண்டும் மலர்ந்துநிற்க, தேவர்கள் மனம் மகிழ்ந்து வணங்க, திருமாலும், அவரது உந்தியில் பூத்த கமலத்தில் தோன்றிய பிரமனும் துதிக்கும்படி கனகசபையில் நடனம் புரிகின்ற இறைவரது திருவடி மலர்களே எமக்குப் புகலிடம்.

குறிப்பு :— நறவு - தேன். இதழி - கொன்றை. நளினம் - தாமரை. குவளை முதலாகச் சொல்லப்பட்ட ஐந்தும் முறையே உமையம்மையின் கண், காது, கை, பல், இதழ் இவற்றைக் குறித்தன. பின்புவந்த தாமரையும், முல்லையும் சிவபெருமானது கண்களையும், புன்சிரிப்பையும் குறித்தன.

(1)

3

# கோட்டுப்பூ வகை

வன்னி,பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு,
மந்தாரை, ஊமத்தை, மாவிலிங்கை, நொச்சி,
பன்னும்அகில், சந்து,மகிழ், மாதுளை,மா, அசோகு,
பாதிரி,வெள்ளெருக்;கிலந்தை, பலாசு,நுணா, நறவம்,
புன்னை,விளா, மருது,கொன்றை, நெல்லி,குராச், செருந்தி,
பொன்னின்ஆவிரை,கிளுவை, குருந்து,வில்வம்,
மன்னுதாதகி,குளஞ்சி, அலரி,வெட்சி, பவழ [ நாவல்,
மல்லிகை,சண்பகம்,ஞாழல் கோட்டுப்பூ வகையே. 2

---

குறிப்பு :— கோட்டுப்பூ - மரக்கிளைகளில் பூக்கின்ற பூ. இலிங்கை - நாகலிங்கம். சந்து - சந்தன மரம். மகிழ்-மகிழமரம். மா - மா மரம். பலாசு - முருக்கு. நறவம் - குங்குமம். பொன்னின் ஆவிரை - பொன்போலப் பூக்கின்ற ஆவிரை. தாதகி - ஆத்தி. குளஞ்சி - கிச்சிலி. ஞாழல் - புலிநகக் கொன்றை. இவையெல்லாம் இப்பூக்களையே குறித்தன.

வன்னி முதல் ஞாழல் முடிய உள்ள நாற்பது பூக்களும் ' கோட்டுப் பூ ' என்னும் வகையின என்பதாம்.

' பூ ' என்று பொதுப்படக் கூறியிருப்பினும், வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, நொச்சி, அகில், சந்தனம், மா, இலந்தை, நுணா, விளா, கிளுவை, வில்வம், நாவல் இவையெல்லாம் பத்திரங்களே. ' பத்திரமும் பூவுக்குச் சமம் ' என்னும் கருத்தினல். ' பூ ' என்றே குறிக்கப்பட்டன.
(2)

## கொடிப்பூ வகை

மருவாருங் காந்தள், காட்டு மல்லிகை, முல்லை,மௌவல்,
கருவார்வெற் றிலையே,தாளி, கருமுகை கருங்காக் கொன்றை,
முருகாரும் வெண்காக் கொன்றை,குருக்கத்தி,முதலா வுள்ள
இருவாட்சி, கொகுடி,பிச்சி இவையெலாங் கொடிப் பூவாமே.

## நீர்ப்பூ வகை

செய்ய தாமரை, சேர்ந்தபொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பலம்,
ஐய செம்மைய வெண்மையவாகிய
நெய்தல் மற்றிவை நீரின் மலர்களே. 4

---

குறிப்பு :— கொடிப் பூ - கொடிகளில் பூக்கின்ற பூ. மரு ஆரும் - மணம் நிறைந்த. மௌவல் - மல்லிகை. கரு ஆர் - கருமை நிறம் பொருந்திய. தாளி - கூதாளி. (இதைச் செடியாகவும் கூறுவர்.) கருமுகை-கரிய அரும்பினை உடைய. 'காக்கொன்றை' என்பது 'காக்கணம்' என்று வழங்குகின்றது. இதில் 'கருங்காக்கணம், வெண்காக்கணம்' இரண்டு உண்டு. முருகு ஆரும் – தேன் பொருந்திய. 'கொகுடி' என்பது முல்லையில் ஒருவகை.

'காந்தள்' முதல் 'பிச்சி' முடிய உள்ள பன்னிரண்டும் 'கொடிப் பூ' என்னும் வகையின என்பதாம்.

இவற்றுள் வெற்றிலை பத்திரம் (3)

குறிப்பு :— செய்ய தாமரை - செந்தாமரை. பொற்றாமரை - பொன்னிறத் தாமரை. துய்ய தாமரை - வெண்டாமரை. இரண்டு உற்பலம் - கருங்குவளை, செங்குவளை

5

## நிலப்பூ வகை

பட்டி, நா யுருவி, பூளை, பச்சை, செவ் வந்தி, தும்பை,
வெட்டிவேர், மருக்கொ ழுந்து, கர ந்தையே, விண்டுகா ந்தி,
மட்டவிழ் துழாய், செங் கீரை, மத்தை, செம் பரத்தை, வங்கம்,
இட்டகொக் கிற, கனிச்சம், வலம்புரி இவைநி லப்பூ. 5

---

செம்மைய நெய்தல் - செவ்வாம்பல். வெண்மைய நெய்தல் - வெள்ளாம்பல்.

செந்தாமரை முதல் வெள்ளாம்பல் முடிய உள்ள ஏழும் 'நீர்ப் பூ' என்னும் வகையின என்பதாம். (4)

குறிப்பு :— பட்டி - பட்டிப்பூ. பச்சை - 'பச்சிலை' என்னும் மரம். செவ்வந்தி, 'சாமந்தி' என்று வழங்குகின்றது. கரந்தை - சிவகரந்தை. விண்டு காந்தி - விஷ்ணு காந்தி. துழாய் - துளசி. செங்கீரை - திருநீற்றுப்பச்சை. மத்தை - ஊமத்தை. வங்கம் - கத்தரி. கொக்கிறகு - கொக்கு மந்தாரை. வலம்புரி - நந்தியாவர்த்தம்.

'பட்டிமுதல்' 'வலம்புரி' முடிய உள்ள பதினெட்டும், 'நிலப்பூ' என்னும் வகையின என்பதாம். 'நிலப்பூ, புதற் பூ' என்றும் சொல்லப்படும். இவை செடியில் பூப்பன.

இவற்றுள் பச்சை, மருக்கொழுந்து, துழாய் இவை பத்திரங்கள். இவற்றால், கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப் பூ நிலப் பூ, எனப் பூக்கள் நால் வகையினவாம் என்பது விளங்கும். (5)

## துளவம் எடுக்கலாகாத நாள்

இரவொடு காலை மாலை இரவியே,வெள்ளி,செவ்வாய்.
பரவும்அட் டமி,ஈ ராறு பதினான்கு, பருவம், ஓணம்
விரவிய மாதத் தாதி, விதிபாதம், அபரா ணத்தில்
மருவிய துளவங் கொய்யின் மால்சிரங் கொய்த லொக்கும். 6

## வில்வம் எடுக்கலாகாத நாள்

தவமுறு மாதமுன், சதுர்த்தி, அட்டமி,
நவமியே, சதுர்த்தசி, நவின்ற நல்லுவா,
அவமறு சோமவா ரத்தும் அன்பர்கள்
சிவனருச் சனைசெயும் வில்வந் தீண்டிடார். 7

---

உரை :— செவ்வாய் வெள்ளி வாரங்களிலும், அட்டமி துவாதசி சதுர்த்தசி பௌர்ணமி அமாவாசைத் திதிகளிலும், திருவோண நட்சத்திரத்திலும், விதிபாத யோகத்திலும், மாதப்பிறப்பாகிய முதல் நாளிலும், சூரியஉதயம் அத்தமனம் பிற்பகல் இரவு வேளைகளிலும் துளசியைக் கொய்தல் கூடாது. கொய்தால், மாயோனது தலையைக் கொய்தபாவம் உண்டாகும்.

குறிப்பு :— அபராணம் - பிற்பகல். (6)

உரை :— சோம வாரத்திலும் சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பௌர்ணமி அமாவாசைத் திதிகளிலும் வில்வத்தைக் கொய்தல் கூடாது. (7)

## துளவமும், வில்வமும் இத்தனை மாதத்துக்கு ஆகும் எனல்

*கூறுநாளில் எடுத்திடு கூவிளம்*
*ஆறுமா தம்வைத் தர்ச்சனை செய்யலாம்*
*நாறும் வெள்ளை நிறத்த நறுந்துழாய்*
*ஏறும் அர்ச்சனை ஈராறு திங்களே.* 8

## துளவத்துக்கும் வில்வத்துக்கும் புறனடை

*ஈரிலை கீழுற இருந்து பூத்திடுஞ்*
*சீரிய துழாய்மலர் தினமும் கொய்யலாம்;*
*ஊரிடும் புழுக்கடி யொன்று மேயலாற்*
*பாரினில் லவையெலாம் பழுதில் வில்வமே.* 9

---

உரை :— உரிய ஒருநாளில் கொய்து வைத்த வில்வத்தை ஆறுமாதம் வைத்துக்கொண்டு பூசைபண்ணலாம். வெள்ளைத் துளசி, பறித்தநாள்முதல் ஓர் ஆண்டுக்கும் பூசைக்கு ஆகும். (8)

உரை :— இரண்டு இலை கீழ்நோக்கி யிருக்கின்ற துளசியை விலக்கப்பட்ட நாளிலும் எடுக்கலாம். 'புழுக் கடி' என்ற ஒரு குற்றம் தவிர, வேறு எந்தக் குற்றமும் வில்வத்திற்கு இல்லை. ஆகையால், புழுக் கடி இல்லாத எந்த வில்வமும் நல்ல வில்வமே. (9)

## இன்ன இன்ன பத்திர புட்பங்களிலே நிர்மாலியமும் ஆகும் எனல்

செழித்திடுந் துளவமும், சிறந்த வில்வமும்,
வழுத்துபொன் மத்தமும், மலரும் நீலமும்,
அழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழித்தநிர் மாலியங் கழுவிச் சாத்தலாம். 10

## இம்மலர் இத்தனைநாட்கு ஆகும் எனல்

அம்புயம் ஏழுநாள், அலரி மூன்றுநாள்,
வம்பவிழ் குடலையில் வைத்துச் சாத்தலாம்;
நம்பிடு நறுமலர் நண்ணி டாவிடில்
தம்பழுப் பரும்பிலை தளிரும் சாத்தலாம். 11

---

உரை :- துளசி, வில்வம், ஊமத்தம் பூ, நீலோற்பலம் (குவளைப் பூ) ஆகிய இவை இயற்கையில் உண்டானவையும் பொன்னால் செய்யப்பட்டவற்றிற்குச் சமம். ஆகையால், இவை நிர்மாலியமாய்விடினும், பின்பு தூய நீரால் கழுவப்பட்டுவிடின், புதியனபோலவே கடவுளுக்குச் சாத்தத் தக்கனவாம். (10)

உரை :- கொய்யப்பட்ட நாள் முதல் ஏழு நாள் வரையில் தாமரைப் பூவையும், மூன்று நாள் வரையில் அலரிப் பூவையும் குடலைக்குள் வைத்திருந்து சாத்தலாம்.

பூசைக்குப் பூக் கிடைக்காவிடில், அரும்பு, பழுப்பிலை, பச்சிலை, தளிர் இவைகளையே பூவாகக் கருதிச் சாத்தலாம். (11)

## உத்தம மத்திம அதம மலர்கள்

உத்தமம் தனக்கென வுற்ற நந்தனம்;
மத்திமம் காட்டினில் மலர்ந்த பூவெலாம்;
இத்தலத் தொருவன்வைத் திட்ட சூழலில்
அத்தனை மலர்களும் அதம மாகுமே. 12

## இம்மலர்கள் ஆகா எனல்

எடுத்துவைத்தே அலர்ந்தமலர், பழம்பூக்கள், மற்ற
எருக்கிலைஆ மணக்கிலையி னிற்பொதிந்த பூக்கள்,
உடுத்தபுடை வையிற்கரத்தின் அமைத்தநறும் பூக்கள்,
உதிர்ந்திடுபூ அரையின்கீழ் உற்றவிரைப் பூக்கள்,

---

பூசை பண்ணுபவன், தனது நந்தவனத்திலிருந்து பெறும் மலர் உத்தமம். காடு முதலிய பொது இடங்களிலிருந்து பெறும் மலர் மத்திமம். பிறர் வைத்த நந்த வனத்திலிருந்து பெறும் மலர் அதமம்.

(இதனால், ஆன்மார்த்த பூசைக்குக் கோயிலுக்குரிய நந்தவனத்திலிருந்து பெறும் மலர் விலக்கப்பட்டுள்ளது. கோயிலிலே இருந்து பூசை செய்தால், கோயில் நந்தவனப் பூவைக் கொண்டு பூசை செய்யலாம். பிறரிடத்தில் விருந்தினராய்ச் சென்று தங்குபவர், அவ்வாறு தங்கியிருக்கும் வரையில் அவர்களது நந்தவனப் பூவைக்கொண்டு பூசை செய்யலாம். விலைக்கு வாங்கும் பூ அதமமாகவே சொல்லப் படுகின்றது.) (12)

உரை — மேற் சொல்லிய சில மலர்கள் தவிர மற்றைய மலர்களில், எடுத்தவைத்து உலர்ந்துபோனபூ, பழையபூ, எருக்கிலை ஆமணக்கிலைகளில் வைக்கப்பட்ட பூக்கள்,

அடுத்தபுழுக் கடிஎச்சம் சிலந்திமயி ருறுதல்,
அங்கையில்வைத் தங்கைகுவித் திடுதல்,கங்குல்தனிலே
எடுத்தமலர், நீர்அமிழ்த்தல், புறங்காட்டி லெய்தல்,
எச்சில்,குளி யாதெடுத்தல் இழிபெனும்ஆ கமமே. 13

## வார புட்பம்

பங்கயம் மலர்ந்தவெள் ளாம்பல், பாசடைச்
செங்கழுநீர் மலர்தகரச் செம்மலர்,
தங்கிய குவலயம் ததைவெண் டாமரை,
மங்கைகேள் நீலம்ஏழ் வார புட்பமே. 14

---

துளசியில் வைக்கப்பட்ட பூக்கள், வெறுங்கையில் சேர்த்துக் கொள்ளுகிறபூக்கள், நிலத்தில் உதிர்ந்தபூக்கள், குடலையில் எடுப்பினும் இடுப்பிற்குக்கீழாகப்பிடித்து எடுத்துவரப்பட்ட பூக்கள், புழுக்கடி, பறவைகளின் எச்சம், சிலந்தி, மயிர் இவை பொருந்திய பூக்கள், இரு கைகளுக்கிடையில் அஞ்சலியாகக் குவித்துப் பிடித்த பூக்கள், இரவில் எடுக்கப்பட்ட பூக்கள், நீரில் ஆழ அமுக்கி எடுக்கப்பட்ட பூக்கள், சுடுகாட்டிலிருந்தும், ஆசௌசத்துடன் இருந்தும், குளியாதிருந்தும் எடுத்த பூக்கள் ஆகியவை பூசைக்கு ஆகா என்று ஆகமங்கள் விலக்குகின்றன. (13)

உரை :- கிழமைகள் ஏழில் ஞாயிற்றில் தாமரைப் பூவும், திங்களில் வெள்ளாம்பற் பூவும், செவ்வாயில் செங்கழுநீர்ப் பூவும், புதனில் தகரப் பூவும், வியாழனில் குவளைப் பூவும், வெள்ளியில் வெண்டாமரைப் பூவும், சனியில் நீலோற்பலப் பூவும் இறைவனுக்குச் சிறப்பாகச் சாத்தப்படும்.

குறிப்பு :- தகரம், ஒருவகைச் செடி. இது 'நந்தியாவட்டை' என்னப்படுகின்றது. (14)

## வீர பத்திரம்

சூரியன் வில்வமே ; துளசி திங்களே ;
ஆரலில் விளா இலை ; அறிவன் மாதுளை ;
வேரிநா யுருவிபொன் ; வெள்ளி நாவலே ;
காரியாஞ் சனியினில் விண்டு காந்தியே. 15

## பஞ்ச வில்வம்

மெச்சியே அடியவர் வியந்து சாத்திடும்
நொச்சியே, நறுவிளா, நுவன்ற கூவிளம்,
வைச்சிடுங் கிளுவையே, மாவிலிங்கையின்
பச்சிலையென்றிவை பஞ்ச வில்வமே. 16

## காலையிற் சாத்தும் அட்ட புட்பம்

வம்பவிழ் அலரி,நா யுருவி, மல்லிகை,
வெம்பிய எருக்குடன், வில்வம், வெண்மலர்
நம்பிய வடுக்கலர், நந்திநாண்மலர்
அம்புயம் காலையில் அட்ட புட்பமே. 17

---

உரை :- கிழமைகள் ஏழில் ஞாயிற்றில் வில்வமும், திங்களில் துளசியும், செவ்வாயில் விளாவும், புதனில் மாதுளையும், வியாழனில் நாயுருவியும், வெள்ளியில் நாவலும், சனியில் விஷ்ணு காந்தியும் சிறப்புப் பத்திரங்களாகச் சாத்தத் தக்கன.

குறிப்பு :- ஆரல் - செவ்வாய். அறிவன் - புதன். (15)

உரை :- நொச்சி, விளா, வில்வம், கிளுவை, இலிங்கை - இவை ' பஞ்சவில்வம் ' எனப்படும். (இவைபத்திரங்கள்.) (16)

## உச்சியிற் சாத்தும் அட்ட புட்பம்

போதவிழ் பொன்னூ மத்தை,புலி நகக் கொன்றை,வெள்ளைப்
பாதிரி, வன்னி, செய்ய வழுதுணை, படர்மந் தாரை,
பேதமாய் மலரும் வெள்ளைக் காக்கொன்றை, பெரிய தும்பை
ஓதியவிவைக ளெட்டும் உச்சியில் அட்ட புட்பம். 18

## அந்தி அர்த்தயாமம் அபராணங்களிற் சாத்தும் அட்ட புட்பம்

வந்தமல் லிகையி ரண்டு, மகிழ்தரு மல்லி கைப்பூக்
கொந்துவேர், சண்பக ப்பூச் சிறியசண் பகம்கொ ழுந்து
சிந்தைகூர் அட்ட புட்பம் சிவன்முடிக் கேறும் போழ்தில்
அந்தியோ டர்த்தயாமம் அபராணந் தனிலு மாமே. 19

---

உரை :- அலரி, நாயுருவி, மல்லிகை, எருக்கு, வில்வம், நந்தியாவர்த்தம், தாமரை இவற்றுடன் ஏதேனும் ஒரு வெள்ளைப் பூ, காலை வழிபாட்டில் அட்ட புட்பங்களாகச் சாத்தத் தக்கன. (17)

உரை .- பொன்னூமத்தை, புலிநகக் கொன்றை, வெள்ளைப் பாதிரி, வன்னி, கத்தரி, மந்தாரை, வெண்காக்கணம், தும்பை - இவை உச்சிக் காலத்தில் அட்ட புட்பங்களாகச் சாத்தத் தக்கன. (18)

உரை ;- மல்லிகை, காட்டு மல்லிகை, மரமல்லிகை, மகிழ், வெட்டிவேர், சண்பகம், சிறுசண்பகம், மருக்கொழுந்து - இவை பிற்பகல், அந்தி, அர்த்தயாமம் இக்காலங்களில் அட்ட புட்பமாகச் சாத்தத் தக்கன. 19

## புலரி முதலிய காலம் எல்லாவற்றிற்கும் உரிய அட்ட புட்பம்

இலகிய புன்னைவெள் ளெருக்குச் சண்பகம்,
நிலவிய வலம்புரி, நீலம், பாதிரி,
அலரிசெந் தாமரை அட்ட புட்பமாம்,
புலரியம் போதொடைப் பொழுதும் சாத்தலாம். 20

## மாத புட்பம்

மெத்திய பலாசு புன்னை, வெள்ளெருக் கலரிப் போது,
கொத்தலர் சண்பகப்பூக் கொன்றையே தும்பை செய்ய
கத்தரி, பட்டி கஞ்சம், காவிமல் லிகை ஈராறும்
சித்திரை முதலாக் கொள்க சிறந்திடும் மாத புட்பம். 21

---

உரை :- புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம்; நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை - இவைகளை எப்பொழுதும் அட்டபுட்பமாகச் சாத்தலாம்.(20)

உரை :- மாதங்கள் பன்னிரண்டில் சித்திரைக்கு முருக்கு, வைகாசிக்குப் புன்னை, ஆனிக்கு வெள்ளெருக்கு, ஆடிக்கு அலரி, ஆவணிக்குச் சண்பகம், புரட்டாசிக்குக் கொன்றை, ஐப்பசிக்குத் தும்பை, கார்த்திகைக்குக் கத்தரி, மார்கழிக்குப் பட்டி, தைக்குத் தாமரை, மாசிக்கு நீலோற்பலம், பங்குனிக்கு மல்லிகை சிறப்பு மலர்களாம்.

குறிப்பு :- 'மாதம்' என்பது சிறப்பாகப் பௌர்ணமியைக் குறிக்கும். (21)

## மாத அபிடேகம்

கொழுந்து, சந்தனம், கூறிய முப்பழம்,
அழுந்து பால், சர்க் கரை, பணி யாரமே,
தழைந்த அன்னம், தழல், நெய், ஒழுகுதேன்,
விழைந்த நெய்பொதி கம்பளம், வெண்டயிர். 22

## கேதார நாதர்க்குரிய பத்திர புட்பம்

வில்வம்மருச் சூதம்மத்தம், மாதுளேயே, நொச்சி
மேவியமுள் ளிலந்தை, நறுங் கரந்தைசெழு வன்னி,
சொல்லியகத் தரி, நெல்லி, சண்பகமே, சாதி,
தும்பையொடு, மருது, மாம ந்தாரம் அலரி,
எல்லவரும் புகழுமந்த விண்டு காந்தி
எழில்தே வதாருவுடன் எருக், கறுகென் றுரைக்கும்
நல்லனவாம் பத்திரங்கள் இருபத் தொன்றும்
நாடரிய கேதார நாதனுக்கர்ச் சனேயே. 23

---

உரை :— பன்னிரண்டு மாதங்களில் வரும் பௌர்ணமிகளில் சிறப்பு அபிடேகப் பொருள்கள் பின்வரும் முறையில் உள்ளன. சித்திரை மருக்கொழுந்து; வைகாசி சந்தனம்; ஆனி முப்பழம்; ஆடி பால்: ஆவணி சர்க்கரை; புரட்டாசி அதிரசம் முதலிய அப்பவகை; ஐப்பசி அன்னம்; கார்த்திகை விளக்கொளி. மார்கழி நெய்; தை தேன்; மாசி நெய்தோய்த்த கம்பளம்; பங்குனி தயிர்.

குறிப்பு :— சில நூல்களில். ஆடிக்குச் சர்க்கரையும், ஆவணிக்கு அப்ப வகையும், புரட்டாசிக்குப் பாலும் சொல்லப்படுகின்றன. (22)

உரை :— வில்வம், மாவிலே, மாதுளேயிலே, நொச்சியிலே, இலந்தையிலே, கரந்தையிலே, வன்னியிலே, கத்தரிப் பூ, நெல்லிப் பூ, சண்பகப் பூ, மல்லிகைப் பூ, தும்பைப் பூ,

## விநாயக சதுர்த்திக்குரிய பத்திர புட்பம்

மேதகுமா சிப்பச்சை, நறுங்கையாந் தகரை,
வில்வமுடன் ஊமத்தை, நொச்சி,நா யுருவி,
ஏதமில்கத் தரி,வன்னி, அலரி,காட் டாத்தி,
எருக்கு,மரு துடன்,மால்பே ரியம்புகாந்தி,
மாதுளையே, உயர்தேவ தாரு,மரு நெல்லி,
மன்னுசிறு சண்பகமே, கெந்தளி,பா திரியே,
ஓதரிய அறுகிவைஒ ரிருபத் தொன்றும்
உயர்விநா யகசதுர்த்திக் குரைத்திடுபத் திரமே. 24

## புட்பம் சாத்தும் முறைமை

முறையுறும் அட்ட புட்ப முதலிய சாத்தும் போதில்
இறைவனுக் கொருபூவேனும் எண்ணினிற் குறைய லாகா,
நிறைவுறப் புனைதல் வேண்டும் நீள்மலர் கிடையா தாகில்
குறைவறச் சொன்ன புட்பம் கூட்டியும் கொள்ள லாமே. 25

---

மருதம் பூ, மந்தாரைப் பூ, அலரிப் பூ. விஷ்ணுகாந்திப் பூ, தேவதாருப் பூ, அறுகம் புல் - இந்த இருபத்தொன்றும் கேதாரநாதருக்குச் சிறந்த பத்திர புட்பங்களாம். (23)

உரை :— மாசிப் பச்சை, கையாந் தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, வன்னி ஆகிய பத்திரங்களும், கத்தரி, அலரி, ஆத்தி, எருக்கு. மருது, விஷ்ணு காந்தி, மாதுளை, தேவதாரு, மருநெல்லி, சிறு சண்பகம், கூதாளி, பாதிரி என்னும் பூக்களும், அறுகம் புல்லும் விநாயக சதுர்த்திக்குச் சிறந்த பத்திர புட்பங்களாகும். (24)

உரை :— இறைவனுக்கு 'அட்ட புட்பம்' என்பது போல எண் குறித்துச் சாத்தப்படும் பூக்கள், அந்த எண்ணிக்கையில் குறையலாகாது. அத்துணைப் பூக்கள்

## இதுவுமது

நறைமலர்ப் பொகுட்டுநன் ஞளம் போக்கியே
குறையுறக் குற்றமாம்; குறைப டாவகை
நிறைவுறச் சாத்துக; நீரின் போதெலாம்
புறஇதழ் போக்கினும் புனித மென்பவே. 26

## இன்ன மலர் இன்ன தேவர்க்காமெனல்

வில்வமுடன், கொன்றைமலர் சங்கரற்கு நேயம்;
வேழமுகற் கறுகு;வெட்சி, கடம்புவிசா கனுக்காம்;
குல்லைநெடு மாலவற்காம்; மலைமகட்கு நீலம்;
கோகனதம் சூரியற்குத்; திருமகட்கு நெய்தல்;

---

கிடையாவிடில், பொன்ஞல் செய்து வைத்துள்ள பூக்களால் குறை நிரப்பிக்கொள்ளலாம். (25)

உரை :— பூக்களின் நடுவில் உள்ள 'கேசரம், உளை' என்னும் பெயர்களை உடைய நூல் இழைபோன்ற உறுப்பு இல்லாமல் சாத்துதல் குற்றமாகும். ஆகையால், அவ் வுறுப்புக் குறையாத பூக்களைத் சாத்துக. நீர்ப் பூக்களை அவற்றைக் கவசம்போல மூடியுள்ள புறஇதழ்களை நீக்கி விட்டுச் சாத்துதலே சிறப்பு. (26)

உரை :— வில்வ இலையும், கொன்றைப் பூவும் சிவபெருமானுக்கும், அறுகம் புல் விநாயகருக்கும், வெட்சிப் பூவும் கடப்பம்பூவும் முருகனுக்கும், துளசி திருமாலுக்கும், நீலோற்பலப் பூ உமையம்மைக்கும், தாமரைப் பூச் சூரியனுக்கும்,

வல்லகலை மடந்தைக்கு வெண்கமலம் நேயம்;
வருங்கொடிய கடவுளர்க்குச் செம்மலர்கள் நேயம்;
அல்லிமலர் கருங்குவளை அனைவருக்கும் நேயம்;
அம்மலரே எம்மலர்க்கும் அதிகமென உரைப்பார். 27

## இன்ன மலர் இன்ன தேவர்க்கு ஆகாதெனல்

தும்பை மறையோர் தமக்காகா: துர்க்கைக் கறுகம் புல்
[லாகா;
வெம்பு கதிர்வா னவன்றனக்கு வில்வம் ஆகா விநாயகற்கு
வம்பார் துளபம் தாஞகா; வடுகன் றனக்கு வலம் புரியும்
அம்பை தனக்கு நெல்லியும்இங் காகா என்பர் அறிந்தோரே.

---

ஆம்பற்பூ இலக்குமிக்கும், வெண்டாமரைப்பூ கலைமகளுக்கும் மிக்க விருப்பத்தைத்தருவன. உக்கிர தேவதைகளுக்குச் சிவப்பு நிறப் பூக்கள் மிக விருப்பமாம். இலக்குமிக்கு விருப்பம் தரும் ஆம்பற் பூவும், உமையம்மைக்கு விருப்பந் தரும் நீலோற்பலப் பூவும் எல்லாக் கடவுளருக்கும் விருப்பந் தருவனவாம். அவரவர்க்கு மிக விருப்பமான மலர்களே அவரவர் வழிபாட்டிற்குச் சிறப்புடையன. (27)

உரை :— அந்தணரை வழிபடுதற்குத் தும்பைப் பூ ஆகாது. துர்க்கைக்கு அறுகம் புல்லும், சூரியனுக்கு வில்வமும், விநாயகருக்குத் துளசியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், உமையம்மைக்கு நெல்லியும் ஆகாவாம். (28)

## விஷ்ணுவுக்கு ஆகும் மலர்கள்

மாதவி குருந்து வாகை மதயாணி கருங்காக் கொன்றை
சீதள முருக்குச் செம்பட் டலரியே செம்ப ரத்தை
கேதகை கருந்துழாய்செந் திலகமும் கேசவற்காம்
நாதனுக் காகா இந்த நறுமலர் அலகைக் காமே. 29

## திரிகால நிர்ணயம்

காலை யானது தாமத காலமே;
ஏலும் உச்சி இராசத காலமே;
மாலை நேரமும் வாழ்த்திடும் யாமமும்
சாலும் வைகறைக் காலமும் சாத்திகம். 30

## தமோகால மலர்

போது ளோதிய பொன்னிறப் பூவுடன்,
சாதி நீலம் தவிர்ந்த கரியபூ
மாது கேளிவை தாமத மாமலர்;
ஓது காலையிற் சாத்துதல் உத்தமம். 31

---

உரை :— குருக்கத்தி, குருந்து, வாகை, கருங்காக் கணம், முருக்கு, செம்பட்டி, அலரி, செம்பரத்தை, தாழை, கருந்துளசி, மஞ்சாடி இப்பூக்கள் திருமாலுக்கு ஆகத் தக்கன. (29)

உரை :- காலை வேளை (சூரிய உதயத்திற்குப் பின்) தாமத வேளை; உச்சிக் காலம் இராசத வேளை; மாலைக் காலமும், முன்னிரவும், சூரிய உதயத்திற்கு முன்னுள்ள விடியற்காலமும் சாத்துவிக வேளையாம். (30)

உரை :- மேல் சொல்லிய பூக்களில் பொன்னிறம் உள்ள பூக்களும், நீலோற்பலம் தவிரக் கருமை நிறம்

## இராசத கால மலர்

செய்யதா மரைப லாசு, செங்கழு நீர்பொன் மத்தை.
செய்யமந் தாரை, செய்ய வழுதுணை, செய்ய பட்டி,
செய்யபா திரியே, செய்ய புலிநகக் கொன்றை உச்சிக்
கெய்திரா சதப்பூ வாகும்; எழுந்தபட் டலரிப் பூவும். 32

## சாத்துவிக கால மலர்

வெள்ளைமந் தாரை, பிச்சி, வலம்புரி வெண்காக் கொன்றை,
வெள்ளைஅம் புயம், எருக்கு, மல்லிகை, வெள்ளி லோத்தி;
வெள் ளலரி யின்பூத், தாளி, மிளிர்புன்னை, மகிழ்செவ் [வந்தி,
தள்ளருந் தும்பை, சாதி சாத்திக மலர்க ளாமே. 33

---

உடைய பூக்களும் தாமத மலர்களாகும். இவைகளைத் தாமத வேளையாகிய காலையில் சாத்துதல் சிறப்பு. (31)

உரை :- செந்தாமரை, முருக்கு, செங்கழுநீர், பொன்னூமத்தை, சிவப்பு மந்தாரை, கத்தரி, செம்பட்டி, செம்பாதிரி, புலிநகக் கொன்றை, பட்டுப்பூ, செவ்வலரி இவை இராசத மலர்கள். இவைகளை இராசத வேளையாகிய உச்சிக் காலத்தில் சாத்துதல் சிறப்பு. (32)

உரை :- வெள்ளை மந்தாரை, பிச்சி, நந்தியாவர்த்தம், வெண்காக்கணம், வெண்டாமரை, வெள்ளெருக்கு, குண்டு மல்லிகை, வெள்ளிலோத்தி, வெள்ளலரி, கூதாளிப் பூ, புன்னை, மகிழ், வெள்ளைச் செவ்வந்தி, தும்பை, சாதி மல்லிகை இவை சாத்துவிக மலர்கள். இவைகளைச் சாத்துவிக காலமாகிய மாலை அர்த்த யாமம், விடியல் ஆகிய காலங்களில் சாத்துதல் சிறப்பு. (33)

## எல்லா மலரும் ஆம்என்ல்

கூறும் பூவிங் கிதுவென்று குறிப்பா ருளரோர் குவலயத்தில்
நாறும் பூவும் தேவருக்காம்; நாறாப் பூவும் தேவருக்காம்;
தேறும் பூவை ஆகமத்திற் கரைகண் டவரார்! சிவன்
[ முடிமேல்
ஏறும் பூவாய் வனத்தி லுள்ள எல்லாப் பூவும் பயன்
படுமால். 34

## சிவபூசை செய்தவைகள்

குதிரை, சிலந்தி, கழுகுடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு,சிதல்,
மதுவண், டலவன், கரிஅரிஆ, மஞ்ஞை, எகினம், புறு,
[ ஆந்தை,
ததியெண்(கு) ஆமை, முயல், கோம்பி, தத்தை, கேழல்,
[ அருச்சிப்ப,
விதியும் விலக்கும் கடந்தாற்கு விதியால் ஒன்றை
[ விதிப்பாரார்! 35

---

உரை:— இங்குப் பூவகைகளை வரையறுத்துக் கூறியவை எல்லாம் விதி மார்க்கத்தில் நிற்பவர்க்குரிய பொதுவிதியே யன்றிப் பக்தி மார்க்கத்தில் நிற்பவர்க்குரிய சிறப்புவிதிகள் அல்ல. ஏனெனில், 'தேவர்கள் அழகும், மணமும் உள்ள பூக்களைத்தான் விரும்புகிறார்கள்; அவை இல்லாத மலர்களை விரும்பவில்லை' என்று சொல்லுதற்கில்லை. 'எந்த வகையான மலரும் தேவர்களுக்கு ஆகின்றன' என்பது ஆகமங்களைக் காணும்பொழுது தெரிய வருகின்றது. மேலும் ஆகமங்களை முற்றும் அறிந்தவர் யாவர்! ஆகையால் நந்த வனத்திலோ, காட்டிலோ பூக்கின்ற பூக்கள் யாவும் தேவர்களுக்கு - சிறப்பாகச் சிவபெருமானுக்கு ஏற்புடையனவே யாம். (34)

உரை :— 'சிவபெருமான் விதி விலக்குக்களை அறிந்த தேவர், முனிவர், சான்றோர் என்பவர்கள் செய்த பூசை

வேட வடிவாய்ப் புலைச்சியிடும் வில்வம் புனைந்து சண்டாள
வேடம் சுமந்து சோமாசி வேள்வி யகத்து விடக்கேந்து
வேடன் சுட்ட சுடுகாட்டு வெந்த சாம்பல் மிசைந்தார்க்கு
வேடன் எச்சில் நுகர்ந்தார்க்கு விதியால் ஒன்றை
[விதிப்பாரார்! 36

களைத்தான் ஏற்றுக்கொள்கின்றார்' என்பதில்லை. அவை களை அறியாத குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, கறையான், வண்டு, நண்டு, யானை, சிங்கம், பசு, மயில், அன்னம், புறு, ஆந்தை, கரடி, ஆமை, முயல், பச்சை ஓணான், கிளி, பன்றி முதலியவை செய்த பூசைகளையும் ஏற்று அருள் செய்திருக்கின்றார். ஆகை யால் அவருக்கு, 'புட்ப விதி' என்று ஒன்றை யார்வரை யறுத்துக் கூறமுடியும்!

குறிப்பு :— இங்குக் கூறிய பிராணிகள் பலவும் சிவ பெருமானைப் பூசித்து நலம் பெற்றமை மகாபுராணங் களிலும், பல தல புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ளன ; அவை அப் புராணங்களில் கண்டு உணரற்பாலன. (35)

உரை ;— சிவபெருமான் இலிங்கவடிவில் இருந்து ஒரு புலைச்சி இட்ட வில்வத்தை ஏற்று அருள் புரிந்ததும், (இது பிரமோத்தர காண்டம் சிவராத்திரி மகிமை அத்தியாயத் தில் சொல்லப்பட்டது.) சோமாசிமாறநாயனர் செய்த வேள்விச் சாலையில் உமாதேவியுடன் புலையர் உருவில் கட் குடத்துடன் வந்து திருவிளையாடல் செய்ததும், (இஃது அம்பர்த்தலபுராணத்தில் உள்ளது.) ஒரு வேடன் சுடு காட்டில் பிணம் எரித்து அவிந்த சாம்பலை நிவேதனமாகப் படைக்க அதை யேற்று அவனுக்குச் சிவலோகத்தை அளித் ததும், (இதுவும் பிரமோத்தர காண்டத்தில் வேடன் சிவ பூசை கடைப்பிடித்த அத்தியாயத்தில் உள்ளது.) வேட

குன்று, மரம்புல் இவைமுதலாக் கோம்பி, உடும்பு தாமுதலா
அன்றில், கழு(கு)ஆந் தைகள் முதலா அரவு, சிறுதேள்
[ இவைமுதலாப்
பன்றிகரன், எலி முதலாப் பரமற் குரிமைப் பயன்படலால்
இன்று முதலா நாயடியேன் எல்லாப் பிறப்பும்
[ வேண்டுவனல். 37

---

ராகிய கண்ணப்ப நாயனர் எச்சிற்படுத்தி இட்ட ஊனை ஏற்றுக்கொண்டதும் ஆகிய வரலாறுகளை நோக்கும் பொழுது, சிவபூசைக்கு அன்பன்றி, விதிமுறைகளை முதன்மையாக யார் கூறமுடியும் !

குறிர்பு :- முதலில் உள்ள 'வேடம்' என்பதற்கு, சிவபெருமானது பொது வடிவமாகிய 'இலிங்கம்' என்று பொருள் கொள்ளப்பட்டது. இனி வேட வடிவத்துடன் புலைச்சிக்கு அருள்புரிந்த வரலாறு இருப்பினும் கொள்க.(36)

உரை :- மலை, மரம், புல் இவையெல்லாம் சிவபூசைக்கு இடமாகவும், துணைப் பொருள்களாகவும்பயன்படுகின்றன. மேற்கூறியவாறு அஃறிணை உயிர்களும் சிவபெருமானைப் பூசித்துப் பயன்பெற்றுள்ளன. அவ்வாறு சிவபூசைக்கு எந்த வகையிலேனும் உரிமையாகக் கூடுமானல், இன்று முதல் அடியேன் தாவர சங்கமங்களில் எந்தப் பிறப்பையும் எடுக்க விரும்புகின்றேன்.

குறிப்பு :- ' குதிரை சிலந்தி " என்பது முதலிய மூன்று பாடல்களும், இங்குக் கூறப்பட்ட விதிகள் பொதுவானவையே என்பதை விளக்க வந்தன. (37)

## இன்னமலர் இன்ன பாவத்தை நீக்கும் எனல்

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கும் ;
இதழிதா யரைக்கொன்ற ஏதம் நீக்கும் ;
வெள்ளெருக்குப் பரதார வினைத ணிக்கும் ;
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்கும் ;
கள்ளுணவு கோங்கம்பூப் புனைய நீக்கும் ;
கத்தரியின் இலைபுனையக் குட்டம் நீக்கும் ;
உள்ளியதெல் லாம்எய்தும் ; வறுமை நீக்கும்
ஒண்துழாய் ; மலர்களினும் உயர்ச்சி தானே. 38

தும்பைமலர் கோகத்தி தோடம் நீக்கும் ;
சொன்னம் நயந்திடுகளவு பலாசு நீக்கும் ;
தம்பிதமை யனைக்கோறல் அறுகு நீக்கும் ;
சாத்திடுஞ்சந் தனம்மகா துக்கம் நீக்கும் ;

---

உரை :- எட் பூ, பிரமகத்தி தோடத்தை நீக்கும் ; கொன்றை, தாயரைக் கொன்ற பாவத்தைப் போக்கும் ; வெள்ளெருக்குப் பிறன்மனை விழைந்த பாவத்தைத் தீர்க்கும் ; வில்வம் பொய்சொன்ன பாவத்தைக் கழிக்கும் ; கோங்கம் பூ, கள்ளுண்ட பாவத்தை அகற்றும். கத்தரி இலை, குட்ட நோய் நீக்கும். துளசி, வறுமையைப் போக்கி, நினைத்தவற்றைக் கொடுக்கும். துளசி, மலர்களினுள் உயர்ந்தது. (38)

உரை :- தும்பைப் பூ, கோகத்தியை (பசுவைக் கொன்ற பாவத்தை)ப் போக்கும் ; முருக்கம் பூ, களவு செய்த பாவத்தைக் கழிக்கும் ; அறுகம் புல், உடன்பிறந்தவரைக் கொன்ற பாவத்தை ஓட்டும். சந்தன இலை சாத்திஞல் பெருந்துன்ப

அம்புவியில் இலிங்கபின்னம் அசோகு நீக்கும்;
அடைந்தோர்தம் வறுமையெல்லாம் ஆன்பால்நீக்கும்;
வம்பவிழ்நெய் நெல்லியிவை உரோகம் நீக்கும்;
வளர்நீலோற் பலம்நீக்கும் வாக்குத் தோடம். 39

## இன்னமலர் இன்னபோகத்தைத் தரும் எனல்

பாதிரிஅம் பிகைக்கணியின் இல்லாள் எய்தும்;
பலாசமலர் அருச்சிக்கப் பணிகள் உண்டாம்;
கேதகையின் மலர்சாத்தச் சிவிகை யெய்தும்;
கிளர்முல்லை மலர்சாத்தக் கவிகை உண்டாம்;
தாதுமா துளசாத்தத் தனங்கள் எய்தும்;
தாமரையின் மலர்சாத்தப் பகைகள் நீங்கும்;
மேதகுநா ரத்தையிலை வியந்து சாத்தில்
விரைத் தகரைச் சாத்தியிடில் பசுவுண் டாமே. 40

---

மும் நீங்கும்; அசோகம் பூ - இலிங்கத்தை உடைத்த பாவத்தை அகற்றும்; நீலோற்பலப் பூ, சொல்லால் வந்த பாவங்களைத் தவிர்க்கும். பால் அபிடேகம் செய்தால், வறுமை தொலையும். நெய்க் காப்பும், நெல்லிக் காப்பும் நோய்களைத் தீர்க்கும்.

குறிப்பு :- பாவம் போக்குதலாகிய இயைபு பற்றி அபிடேகத்தையும் உடன் கூறினர். (39)

உரை :- உமாதேவிக்குப் பாதிரிப் பூச் சாத்தினல், நல்ல மனைவியை மணத்தல் உண்டாகும்; முருக்கம் பூ அணிந்தால், ஆபரணங்கள் கிடைக்கும். தாழம் பூச் சாத்தினல், சிவிகை ஏறும் செல்வம் உண்டாம். முல்லை மலர் சாத்தினல், வெண்கொற்றக் குடை கிடைப்பதாகும்.

தேக்கமழும் எலுமிச்சைக்(கு) ஆடு பல்கும்;
செங்கழுநீர் மலர்சாத்தப் புரவி ஏய்தும்;
காக்கமழு மலர்சாத்தக் கமலை சேர்வாள்;
கல்லார மலர்சாத்தப் புதல்வர்ப் பேறும்;
மாக்கமழும் நெய்தலுக்(கு)அத் தங்கள் உண்டாம்;
மதுஅபிடே கம்பண்ணிற் கீதம் உண்டாம்;
பாக்கியங்கள் அத்தனையும் வேண்டும் என்னில்
பரிமளமா மலரனைத்தும் பார்வதிக்(கு)அர்ச் சனையே.

---

மாதுளம் பூச் சாத்தினால் பொன்னும், மணியுமாகிய நிதிகள் கிடைக்கும். தாமரைப் பூச் சாத்தினால், பகைவரை வெல்லும் வெற்றி உண்டாம். நாரத்தை இலை சாத்தினாலும், தகரை இலை சாத்தினாலும் பசுக்கள் சேரும்.

குறிப்பு :— இவையும், பின் வருவனவும் அம்மைக்குச் சாத்துவனவே என்க. (40)

உரை :- எலுமிச்சையிலை சாத்தினால், வெள்ளாடுகள் பெருகும். செங்கழுநீர் பூச் சாத்தினால் குதிரை வரும். காக்கணம் பூச்சாத்தினால், இலக்குமி சேர்வாள். நீலோற்பலப் பூச்சாத்தினால், மக்கட்பேறு உண்டாகும். ஆம்பற்பூச் சாத்தினால், கைப்பொருள் உண்டாகும். தேன்அபிடேகம்செய்தால் இனிய இசை வன்மை உண்டாகும். எல்லாப் பாக்கியங்களும் பெற விரும்பினால், அம்பிகைக்கு மணம்மிக்க மலர்களை யெல்லாம் கொணர்ந்து நிரம்பச் சாத்துதல் வேண்டும். (41)

அரிசியோ டறுகு சாத்தல் அருக்கியம் பூவி னாலே
பரிவுறக் கொடுத்தல் யாக புண்ணியம் பலவும் உண்டாம்;
விரிமலர் நீலம்அத்த யாமத்தில் விசேட மாகும்;
பரிமளந் தோய்த்தும் ஈசன் பதமலர் சாத்தலாமே. 42

## சூரியனுக்கு வில்வமும், விநாயகருக்குத் துளவமும் ஆகாமைக்குக் காரணம்.

சூரியன் தினத்தில் ஈசன் சூடலால் சூரியற்கு
நேரிய வில்வம் ஆகாவாயின; நிருமலர்க்கு
நாரிதன் கொங்கையே போல் நயத்தலால் துளவந்தன்னைச்
சீரிய முன்னோன் வேண்டான் சிவன்சொலச் செவியிற்
[ கேட்டு. 43

---

உரை :- அறுகம்புல்லை அட்சதையுடன் சேர்த்துச் சாத்தினாலும், அர்க்கியத்தைப் பூவினால் கொடுத்தாலும் பல யாகங்களைச் செய்த பலன் உண்டாகும். அர்த்தயாம பூசையில் நீலோற்பல மலரைத் தனியாகவோ, சந்தனத்தில் தோய்த்தோசாத்தினாலும் மேற்கூறிய பயன் உண்டாகும்.(42)

உரை :— சிவபெருமான் வில்வத்தை ஞாயிற்றுக்கிழமையில் எடுத்து அணிந்துகொண்டதால், வில்வம் சூரியனுக்கு ஆகாதாயிற்று. துளசியைச் சிவபெருமான் உமாதேவியின் தனங்கள்போலக் கருதி அணிதலால் அது, விநாயகருக்கு ஆகாதாயிற்று. சிவபெருமானது கருத்தை அவரே சொல்ல விநாயகர் கேட்டார். (43)

## செவ்வந்தி மலர்

சாரமா முனிவன் அன்று சாத்துசெவ் வந்திப் பூவை
வாரமா னுடனே சூட மண்மாரி உறையூர்ப் பெய்தச்
சேரமான் பரவ லான செம்பியன் பட்ட தன்மை
யாரமா உரைக்கற் பாலர் அரன்சிராப் பள்ளி தன்னில். 44

## தாழம்பூ

திருமுடி கண்டே னென்று திசைமுகன் பொய்யு ரைப்ப
இருமடி கரியா நிற்ப இருவர்க்கும் சாபம் எய்த
வருமடி யவர்கள் கைதை மலர்சிவன் முடியிற் சாத்தார்;
பெருமிடி வரினும் பொய்ச்சொற் பிதற்றிடார் பெரியோ
[ராவார். 45

---

உரை:— திருச்சிராப்பள்ளியில் உள்ள தாயுமான சுவாமிக்கு என்று சாரமாமுனிவர் வைத்திருந்த செவ்வந்திப் பூவை எடுத்துத் தான் அணிந்து கொண்டமையால், அவ்வூர் மண்மாரி பெய்து அழிந்தது. ஆகவே, சிவனுக்கு ஆகும் மலரைக் கைக்கொள்வதால் வரும் தீமையையார் சொல்ல வல்லவர்! (44)

உரை :— திருமாலும், பிரமனும் சிவபெருமானது அடி முடிகளைத் தேடிச்சென்றபொழுது பிரமன், 'நான் முடியைக் கண்டுவிட்டேன்' என்று பொய்சொல்லியபொழுது, தாழம் பூ அவனுக்குத் துணையாக, 'ஆம் இவன் முடியைக் கண்டான்' என்று ஒருமுறைக்கு இருமுறையாக வலியுறுத்திப் பொய்ச்சான்று சொல்லிற்று. அதனல், அது சிவபெருமானுக்கு ஆகாதாயிற்று. பெரியவர் என்று புகழப்படுபவர்கள், பெரியதோர் வறுமை வரினும் பொய் சொல்லாரன்றே! (45)

## நந்தவனம் வைத்ததினுற் சிவத்துரோகம் தீர்ந்தமை

அந்தணன் ஆலயத்தில் அரன் பூசைக் கேறும்
அரம்பை நறுங் கனிவாங்கித் திவசஞ் செய்ய
வந்தபெரும் பாவத்தால் நரகம் எய்த
மறலியுடன் மாலயனும் அறியோம் ஐயா
இந்தநர கிவன் எய்தும் காலம் ஏன்ன
இவன் கிளையில் ஒருவரும்அங் கின்மை யாலே
நந்தவனம் முனிஇயற்றி நறும்பூச் சாத்த
நான்மறையோன் அம்மலரால் நரகந் தீர்ந்தான். 46

---

உரை :- அந்தணன் ஒருவன் கோயிலில்-சிவாலயத்தில் சிவபெருமானது பூசைக்காக வைத்திருந்த வாழைப்பழத்தை எடுத்துக்கொண்டுபோய்த் தன் முன்னோர்களுக்குத் திதி கொடுக்க, அதனுல் விளைந்த பாவத்தால் அந்த அந்தணன் நரகம் அடைந்தான். அவனுக்குச் சந்ததி இல்லாமையால், அவன் எப்பொழுது அந் நரகத்தை விட்டு நீங்குவான் என்பதை பிரம விட்டுணுக்களும் அறியாமல் திகைத்தனர். அதை அறிந்த முனிவர் ஒருவர் அவனுக்காக ஒரு நந்தவனம் வைத்து, அதினின்றும் பூக்களைக் கொய்து சிவபெருமானுக்குச் சாத்த, அந்த அந்தணன் நரகத்திலிருந்து மீண்டான்.

குறிப்பு :- இதனுல் பூசைப் பொருள்களைக் கவர்தலின் குற்றமும், புட்பத் தொண்டால் விளையும் பயனும் நன்கு விளங்கும். (46)

## வியாக்கிரபாதர் முத்லியோர் பூவால் அருச்சித்த முறைமை

சிறையளி புகுதா முன்னம் சிறுகாலே எழுந்தி ருந்து
பொறைமரம் வழுக்கா தேறப் புலிநகம் பெற்றும் அந்த
நறைமலர்ப் பழுது பார்க்க நகந்தொறுங் கண்ப டைத்தும்
குறைவறப் புரிந்தான் பூசை குயவரிப் பதத்தி னனே. 47

கங்கையின் மிதந்த பூவைக் கழுவியே அருச்சித் தோனும்,
வெங்கலின் மலரிட் டோனும்; விழிமலர் சாத்தி னோனும்
மங்கையர் முலைமேற் கிள்ளித் தாம்பூலம் வைத்தோன் றனும்
சங்கரற் குகந்த அன்பால் தலையினல் சாத்தி னோனும். 48

---

உரை :- வியாக்கிரபாத முனிவர் (புட்பத் தொண்டின் பெருமையையும், அதில் குற்றம் இருத்தல் ஆகாது என்பதையும் தெரிந்து) பூக்களில் வண்டுகள் சென்று விழுவதற்கு முன்பே அதிகாலையில் எழுந்து பூமரத்தின்மேல் ஏற அவை வழுக்காதிருத்தற்பொருட்டு உறுதியான நகத்தைக் கொண்ட புலிக் கால்களையும், இருளில் அரும்பு இவை, மலர் இவை என்று தெரிதற்கு நகக்கண்களில் எல்லாம் கண்களையும் இறைவனை வேண்டிப் பெற்று புட்பத் தொண்டினைக் குறையறச் செய்தார் (என்பதை உணர்தல் வேண்டும்.)

குறிப்பு :— குயவரி - அரிவாள்போல வளைந்த கோடுகளையுடைய புலி. இவ்வரலாறு, கோயிற் புராணம் வியாக்கிரபாத சருக்கத்தில் சொல்லப்பட்டது! (47)

உரை :— தண்ணீரில் மிதந்து வந்த நிர்மாலியப் பூவைக் கழுவிச் சாத்திய உபமன்னிய முனிவரும், கல்லையே மலராகக் கொண்டு அர்ச்சனை செய்த சாக்கிய நாயனரும், தமது கண்ணையே மலராகப் பறித்துச் சாத்திய திருமாலும்,

## நினைவு வேறுதலால் ஆகாதெனல்

கொந்தலர் கொய்யும் போது கூர்விழி மைய லாலே
பைந்தொடி மடவார் தம்மைப் பார்த்தலால் கைலை வெற்பில்
சுந்தரன் பட்ட காதை அறிதிரே துணர்மென் போதால்
அந்தணர் கீழ்க ளாவார்; கீழ்கள்அந் தணர்க ளாவார். 49

---

தன்னால் விரும்பப்பட்ட மங்கையின் தனங்களை இலிங்கமாகப் பாவித்து வெற்றிலையைச் சாத்தினவனும், பறித்துத் தலையில் வைத்துக்கொணர்ந்த பத்திர புட்பங்களைச் சாத்திய கண்ணப்ப நாயனாரும் அன்பே காரணமாகச் செய்து பயன் பெற்றார்கள். (ஆகையால் புட்பத் தொண்டு செய்வோர் அதனைப் பக்தி சிரத்தையுடன் செய்தல் வேண்டும்.)

குறிப்பு :— 'கண்ணபிரான் மகப்பேறு வேண்டி யமுனா நதிக்கரையில் மேற்கேயிருந்து சிவபூசைசெய்து அந்நதியில் விட்ட பூக்களைக் கிழக்கேயிருந்த உபமன்னிய முனிவர், பூக் கிடைக்காமையால், 'சிவதீட்சையில்லாமல் செய்யும் பூசை பூசையாகாது; அதனால் அதில் சாத்தப்பட்ட பூக்களும் நிர்மாலியம் அல்ல' என்று மாணவர்களுக்குக் கூறி, அப்பூக்களை எடுத்துக் கழுவிக் கொணரச் செய்து, சிவபூசை செய்தார். அதையறிந்த கண்ணபிரான் அம் முனிவரிடமே சென்று சிவதீட்சை பெற்றுச் சிவபூசை செய்து, 'அநிருத்தன்' என்னும் மகனைப்பெற்றான்' என்னும் வரலாறு சிவரகசியத்தில் சொல்லப்பட்டது. இதனையே சேக்கிழாரும்,

யாதவன் துவரைக் கிறையாகிய
மாதவன் முடிமேல் அடி வைத்தவன். (48)

எனக் கூறினார்.

உரை :- திருக்கயிலையில் பூக் கொய்யும்போது இரு மாதர்மேல் மனத்தைச் செலுத்திய குற்றத்தால் ஆலால

பெருக்கமா மலர்க ளேனும் பிஞ்ஞகன் பிரியங் கூரான்
சுருக்கமே யெனினும் ஐயா தூய்மையே அணையுங் கண்டீர்!
உருக்கமும் இன்றிப் பூவும் உதகமும் பழுதே யானால்
அருட்கணும் உளவோ கண்ணில் அருவருத் திடுவான்
[ஐயன். 50

## விரத்தர் தன்மை

ஆம்விரத்தி முதிர்ந்தவர்கள் அருச்சனையுஞ் செயவேண்டின்
பூமரத்தின் உதிர்ந்தமலர் புன்சருகுங் கொளற் பாலார்;
மாமரத்தின் கோலொசித்து வாய்விளக்க வுங்கொள்ளார்
தாமொருத்தர் தரக்கொள்வர் தாவரங்கள் சலியாமே. 51

---

சுந்தரர் மண்ணில் மானுடராய்ப் பிறந்து பட்ட துன்பத்தை அறிந்தீரன்றே! புட்பத் தொண்டில் செய்யும் தவற்றால் உயர்ந்தோர் இழிந்தோராய்விடுவர். அத்தொண்டினைச் செம்மையாகச் செய்வதால் இழிந்தோர் உயர்ந்தோராவர். (49)

உரை :- பூக்களை மலைபோல நிரம்பக் கொணர்ந்தாலும், மேற்சொல்லிய குற்றம் உடையனவாயின், சிவபெருமான் அவற்றை ஏற்றுக்கொள்ளான். சில மலர்களேயாயினும், குற்றமற்ற தூய மலர்களாய் இருப்பின், அவற்றையே பெருமான் விரும்புவான். குற்றம் உடையனவாயினும், அன்பு மிக இருந்தால் அவற்றை விரும்புவான். அன்பும் இல்லாமல், தூய்மையும் இல்லாமல் இருப்பின், அவைகளைச் சிவபெருமான் கண்ணால் காணவும் அருவருப்பான். அவர்களுக்கு எவ்வாறு அப்பெருமானது அருள்நோக்கம் உண்டாகும்! (50)

உரை :- உலகியலில் பற்றுச் சிறிதும் இல்லாதவர் பூசை செய்ய விரும்பினால், அவர்களுக்குக் கீழே உதிர்ந்த பூவும்,

## 32

## மாவிளக்கிடு முறைமை

தவறறப் பகலூண் நீக்கிச் சனிப்பிர தோட மாதல்
சிவநிசி யாதல் வெண்டா மரையின்நூல் திரியால் தூண்டி
அவமறு செஞ்சம் பாவின் அரிசிமா அகலாப் பண்ணிக்
கபிலைநெய் கொண்டு தீபங் கண்டுளோர் கொண்டு
[ளோரே. 52

---

உதிர்ந்த சருகும் பூசைக்கு உதவுவனவாம். மற்றையோருக்கு அவை ஆகா. ஏனெனில், பற்றற்ற துறவிகள் ஓரறிவுயிர்க்கும் சிறிதும் ஊறு செய்யார் ஆகையால், இவர்கள் பல்விளக்குதற்குப் பற்குச்சியையும் தங்கள் கையால் ஒடியாமல், பிறர் கொணர்ந்து கொடுக்கவே பெறுவர். (51)

உரை :— இறைவனுக்கு மாவிளக்கு இட விரும்புவோர் சனிவாரத்தில் வரும் பிரதோடத்திலாவது, சிவராத்திரியிலாவது பகலில் உண்ணாதிருந்து, இரவில் வெண்டாமரைத்தண்டின் நூலால் திரிதிரித்து, செந்நெல் அரிசி மாவால் அகல் பண்ணி, அதில் கபிலைப் பசுவின் நெய்யை வார்த்து விளக்கேற்றவேண்டும்.

குறிப்பு :— கபிலைப்பசு (காராம்பசு) எனப்படுகின்றது. இது மடியில் கபில நிறம் உடையதாய் இருக்கும். சிவராத்திரி, மாத சிவராத்திரியுமாம். (52)

*உத்தமம் ஒருமுந் நாழி ஒன்றரை நாழி நெய்தான்*
*மத்திமம்; அதமம் தானும் மற்றதில் பாதி நெய்யாம் ;*
*கைத்திரி அளவு கையில் பருவிரல் கணித மாகும் ;*
*அத்திரி எரியும் செந்தீ அங்குலம் ஆறி ரண்டே.* 53

## நூல் செய்தோர் பெயரும் முதனூலும் நூற்பெயரும், நூற்பயனும்.

*ஆர்புனை சடையோன் சைவ ஆகமங் களைஆ ராய்ந்து*
*பேர்புனை கமலை ஞானப் பிரகாசன் தமிழாற் சொன்ன*
*வேர்புனை தளஞ்சேர் புட்ப விதிமாலைப் படியே பாரிற்*
*சீர்புனை பூசை செய்வோர் திருவருள் பெறுவர் தாமே.*

---

உரை :— மாவிளக்கில் முந்நாழி நெய் வார்ப்பது உத்தமம் ஒன்றரை நாழி நெய் வார்ப்பது மத்திமம்; முக்கால் நாழி நெய்வார்ப்பது அதமம். மாவிளக்கில் இடப்படும் திரி, கைப்பெருவிரற் பருமன் இருத்தல் வேண்டும். அதில் ஏற்றப்படும் விளக்கு, பன்னிரண்டு விரற்கிடை அளவு உயரம் எழுந்து விளங்க வேண்டும். (53)

உரை :— சிவபெருமான் அருளிச்செய்த ஆகமங்களை ஆராய்ந்து, புகழ் பொருந்திய கமலை ஞானப்பிரகாச பட்டாரகர் தமிழால் அருளிச்செய்த பூசைக்கு முதலாவதாகிய புட்பங்கள் பற்றிய விதிமாலையின் படியே இவ்வுலகில் சிறப்புப் பொருந்திய பூசையைச் செய்பவர்கள் சிவபெருமானது திருவருளைப் பெறுதற்கு உரியவராவர்.

குறிப்பு :— *ஆர் - ஆத்தி மாலை. கமலை - திருவாரூர்.*

புட்பவிதி முற்றுப்பெற்றது.

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பூக் கொய்யும் முறைமை

புலரும் பொழுதின் முன்னெழுந்து
புனித நீரில் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித்தம் பெருமான்
முடிமேல் வான்நீர் ஆறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும்
பதத்தின் உடன் பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு
திருப்பூங் கூடைகளில் அமைப்பார்.

— பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்

# பிரகடன பத்திரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணம் செய்யுள் ஆப்பவுண்டு | 8 | 0 |
| ஷை கலிகோ | 9 | 0 |
| கந்தபுராண வசனம் ஆப்பவுண்டு | 5 | 0 |
| ஷை கலிகோ | 5 | 8 |
| கந்தபுராணச்சுருக்கம் | 0 | 10 |
| வள்ளியம்மை திருமணப்படலம் உரையுடன் | 1 | 4 |
| தெய்வயானையம்மை திருமணப்படலம் உரையுடன் | 1 | 8 |
| பெரியநாயகியம்மன் விருத்தம், பிக்ஷாடன நவமணி மாலை உரையுடன் | 0 | 4 |
| பெரியபுராணம் சூசனத்தோடு ஆப்பவுண்டு | 5 | 0 |
| ஷை கலிகோ | 5 | 8 |
| பெரியபுராணம் சூசனம் | 0 | 12 |
| பெரியபுராண வசனம் | 2 | 12 |
| சமயாசாரியர் சந்தானசாரியர் சரித்திர சங்கிரகம் நால்வர் நான்மணிமாலை உரையுடன் | 0 | 8 |
| திருவிளையாடற் புராணம் செய்யுள் | 2 | 0 |
| திருவிளையாடற்புராண வசனம் | 2 | 0 |
| சேதுபுராணம் | 2 | 0 |
| கோயிற்புராணவுரை | 1 | 4 |
| சிவஞானபோதம் சிவஞானமுனிவர் சிற்றுரை கலிகோ பவுண்டு | 1 | 8 |
| திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு உரையுடன் கலிகோ | 2 | 4 |
| திருவாசகம்—(மாணிக்கவாசகர் சரித்திரத்துடன்) | 0 | 8 |
| சைவசமயநெறியுரை | 1 | 4 |
| அருட்பா—இது அகத்தியர் தேவாரத்திரட்டும் திருவாசகமும் திருவிசைப்பாவும் திருப்பல் லாண்டும் பெரியபுராணச் செய்யுட்டிரட்டும் அடங்கியது. | 1 | 12 |

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலன அச்சகம்,
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை-1.